(ஆறாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

**இல. 18.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2009, யூலை 23, வியாழக்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0011/ '09

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இன்று நடைமுறையில் உள்ள சகல நேரடி மற்றும் மறைமுக வரிகளையும்,

(ii) இன்றைய விகிதங்களைப் பயன்படுத்தி, வரியின் தாக்கத்தை ரூபாவின் பெறுமதியிலும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) (i) அரிசி, சீனி, பருப்பு, பால்மா, கோதுமை மா, பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய், தகரத்தில் அடைக்கப்பட்ட மீன், வெங்காயம், மின்சாரம் மற்றும் வங்கிக் கடன்கள் ஆகியவற்றிற்கு இன்றைய தினத்திலுள்ளவாறு விதிக்கப் பட்ட சகல வரிகளையும் வெவ்வேறாகவும்,

(ii) இப்புள்ளி விபரங்களின் -

(1) 1994 - ஓகஸ்ட் 15

(2) 2001 - டிசம்பர் 15

(3) 2004 - ஏப்ரல் 2

(4) 2005 - டிசம்பர் 1

(5) மற்றும் இன்றைய தினம்

ஆகிய திகதிகளுடனான ஒப்பீடு ஒன்றையும், அவர் கூறுவாரா?

(இ) இன்றைய தினத்திலுள்ளவாறான விகிதங்களைப் பயன்படுத்தி, வளப் பெறுமதி யில் வரியின் தாக்கத்தையும் அவர் கூறுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0173 / '09

2.

கௌரவ விஜித ரணவீர,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிராம உத்தியோகத்தர் சேவையின் III ஆம் தரத்துக்கு சேர்த்துக் கொள்வதற்காக 2006 ஆண்டு நடைபெற்ற போட்டிப் பரீட்சையில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில், அம்பலாந்தோட்டை பிரதேச செயலாளர் பிரிவில் நேர் முகப்பரீட்சைக்குத் தோற்றி திறமை பட்டியலின்படி முதலாவது இடம் தொடக்கம் 06 வது இடம் வரை தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்கள், முகவரி, மற்றும் அவர்கள் பெற்ற மொத்தப் புள்ளிகள் வெவ்வேறாக யாவை என்பதையும்,

(ii) அம்பலாந்தோட்டை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கிராம உத்தியோகத்தர் வெற்றிடங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) திறமை பட்டியலுக்கு அமைய போட்டிப் பரீட்சையில் முதலாம் மற்றும் இரண்டாம் இடத்தைப் பெற்ற விண்ணப்பத்தாரர்களுக்கு கிராம உத்தியோகத்தர் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதா,

(ii) அந்த நியமனங்கள் வழங்கப்படாவிடின் அதற்கான காரணங்கள் என்ன,

(iii) முதலாம், இரண்டாம் இடத்தைப் பெற்ற விண்ணப்பதாரர்களுக்கு குறிப்பிட்ட கிராம உத்தியோகத்தர் நியமனங்கள் வழங்கப்படாவிட்டால் மூன்றாம் இடத்தைப் பெற்றவர்களுக்கு அந்த நியமனங்கள் வழங்கப்படுமா என்பதையும்,

(iv) அது எந்த கால வரையறைக்குள் என்பதையும்,

(v) மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்டவர்களுக்கு அந்த கிராம உத்தியோகத்தர் நியமனங்கள் வழங்கப்படாவிடின் அதற்கான காரணங்கள் என்ன என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0205 / '09

3.

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில், நீரகவளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) வெளிநாட்டு மீன்பிடிப்படகுகளினால் மீன்கள் கொண்டுவரப்படும்போது மீன்கள் தரப்படுத்தப்படுகின்றதா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2005 செப்டம்பர் மாதத்திலும் 2006 மே மாதத்திலும் 2008 டிசம்பர் மாதத்திலும் வெளிநாட்டு மீன்பிடிப் படகுகளினால் மீன்கள் கொண்டுவரப்படுகையில் மூன்றாம் தர மீன் ஒரு கிலோகிறாமுக்கு கடற்றொழில் கூட்டுத்தாபனம் அறவிட்ட தொகை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0279 / ' 09

4.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2007 ஆம் ஆண்டில் 63 பிரதான இரயில் வண்டிகளும் 142 ஏனைய இரயில் வண்டிகளும் தடம் புரண்டதாக அறிக்கையிடப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) இதன் விளைவாக ஏற்பட்ட உடல் ரீதியிலான சேதம் மற்றும் பௌதீக ரீதியிலான நட்டம் ஆகியவை எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) அவ்வாறானதொரு நிலைமை ஏற்படுவதற்கான காரணம் யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0312 / ' 09

5.

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) காலி மாவட்டத்தின் ஹபராதுவ பிரதேச செயலகப் பிரிவில் 2000ஆம் ஆண்டு முதல் 2008 ஆம் ஆண்டு வரை பயிரிடப்பட்ட வயற் காணிகள் வருடாந்தம் எத்தனை ஏக்கர்களென்பதையும்,

(ii) 2008 ஆம் ஆண்டு அறிக்கையிடப்பட்ட வயற் காணிகளில் பயிரிடப்படாத நிலையில் கைவிடப்பட்டுள்ள வயற் காணிகள் எத்தனை ஏக்கர்களென் பதையும்,

(iii) இப்பிரதேச செயலகப் பிரிவில் 350.00 ரூபா மாணிய விலையில் வருடாந்தம் வழங்கப்பட்ட உரத்தின் அளவு எவ்வளவென்பதையும்,

(iv) இப் பிரதேச செயலகப் பிரிவில் கால்வாய்களையும் அணைக்கட்டுகளையும் புனரமைப்பதற்கு 2004 ஆம் ஆண்டு முதல் 2008 ஆம் ஆண்டு வரை ஒதுக்கப்பட்ட பணத்தொகை ஒவ்வொரு கருத்திட்டத்திற்கேற்ப வெவ் வேறாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) (i) "நாங்கள் பயிரிடுவோம் - நாட்டை கட்டியெழுப்புவோம்" நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதையடுத்து பயிரிடப்படாமல் கைவிடப்பட்ட நிலையி லிருந்த வயற்காணிகளை பயிரிடுவதற்கு விவசாயிகளை ஊக்குவிப்பதற்காக, மேற்படி பிரதேச செயலகப் பிரிவில் கால்வாய்களையும் அணைக்கட்டுக் களையும் புனரமைப்பதற்கு வருடாந்தம் செலவுசெய்யப்பட்டுள்ள பணத் தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(ii) 2004 ஆம் ஆண்டு முதல் 2008 ஆம் ஆண்டு வரை பயிரடப்படாமல் கைவிடப்பட்ட நிலையிலிருந்த வயற் காணிகளின் சதவீதம் எவ்வள வென்பதையும்,

(iii) அனைத்து வயற்காணிகளையும் பயிரிடுவதற்கு எவ்வளவு காலம் எடுக்கு மென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0376 / '09

6.

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) மஹிந்த சிந்தனை கொள்கை விஞ்ஞாபனத்தின் 9ஆம் பக்கத்தில் (சிங்கள மொழிமூலம்) முன்மொழியப்பட்டுள்ளவாறு பிறப்பு முதல் 5 வயது வரையிலான பிள்ளைகளுக்கு பால் மா கொள்வனவு செய்வதற்காக மாதாந்தம் 200 ரூபா வீதம் வழங்குவது இது வரை செயற்படுத்தப்பட்டுள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தற்போது இந்த 200 ரூபா வழங்குதல் செயற்படுத்தப்படும் பிரதேச செயலாளர் பிரிவுகள் யாவை,

(ii) இந்த 200 ரூபா வீதமான தொகை வழங்கப்படும் பிள்ளைகளின் எண்ணிக்கை யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0012 / '09

7.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சரும் துறைமுகங்கள், விமானச்சேவைகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 'மிஹின் எயார்' கூட்டிணைக்கப்பட்ட திகதியினையும்,

(ii) அதன் முதலாவது வர்த்தக விமானம் சென்ற திகதியையும்,

(iii) 'மிஹின் எயார்' ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து இற்றைவரையிலான அதன் பணிப்பாளர்களின் பெயர்களையும்

அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) ஒவ்வொரு நபருக்கும் வழங்கப்பட்ட சம்பளம், மிஹின் விமான சேவையைப் பயன்படுத்த வழங்கப்பட்ட விமானச் சீட்டு, ஏனைய விமானச் சேவைகளைப் பயன்படுத்த வழங்கப்பட்ட விமானச் சீட்டு மேலும் வழங்கப்பட்ட வேறு ஏதாவது நன்மைகள் என்பவற்றை ஒவ்வொரு நபர் அடிப்படையிலும் வருட அடிப்படையிலும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) கொடுக்கப்பட்ட வேறு ஏதாவது நன்மைகளையும் மேலும் கொடுக்கப்பட வேண்டிய வேறு ஏதாவது நன்மைகளையும்,

(ii) இயக்கப்பட்ட நாளிலிருந்து மாதாந்த தேறிய இலாபத்தையும் மொத்த இலாபத்தையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0214 / '99

8.

கௌரவ பேமசிறி மானகே,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொதுத் திறைசேரி 2008 ஆம் ஆண்டில் சனவரி மற்றும் யூன் மாதங்களில் இலங்கை வங்கியிடமிருந்தும் மக்கள் வங்கியிடமிருந்தும் வங்கி மேலதிகப் பற்றுகளைப் பெற்றுக் கொண்டுள்ளதா,

(ii) ஆமெனில், பெற்றுக் கொண்ட வங்கி மேலதிகப் பற்றுகளின் நிதிப் பெறுமதி எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) 2009 ஆம் ஆண்டு சனவரி மாதத்தில் பொதுத் திறைசேரி இலங்கை வங்கியிடமிருந்தும் மக்கள் வங்கியிடமிருந்தும் வங்கி மேலதிகப் பற்றுகளைப் பெற்றுக் கொண்டுள்ளதா,

(ii) அவ்வாறு பெற்றுக் கொண்ட வங்கி மேலதிகப் பற்றுகளின் நிதிப் பெறுமதி எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0280 /'09

9.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புகையிரத திணைக்களத்தினால் தனியார் கம்பனியொன்றுக்கு மூன்று தடைப்பூண்டு வண்டிகள் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனில், அக் கம்பனியின் பெயர், முகவரி மற்றும் தடைப்பூண்டு வண்டிகள் வழங்கப்பட்ட திகதி என்பவை யாவை என்பதையும்,

(iii) இவை வழங்கப்பட்டுள்ள அடிப்படை அல்லது உரிய ஒப்பந்தம் யாது என்பதையும்,

(iv) மேற்படி ஒப்பந்தங்களின் பிரகாரம் உரிய திணைக்களத்திற்குப் பணம் செலுத்தப்பட்டுள்ளதா என்பதையும்,

(v) உரிய பணம் செலுத்தப்படாதுள்ளதால் திணைக்களத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டத்தின் நிதி ரீதியான பெறுமதி எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0379 / '09

10.

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) மஹிந்த சிந்தனை கொள்கை பிரகடணத்தின் 09 ஆம் பக்கத்தில் (சிங்கள மொழி) பிரேரிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் முன்பள்ளி ஆசிரியைகளுக்குத் தேவையான தொழில்நுட்பப் பயிற்சி மற்றும் நிதி வசதிகளை மாதாந்தம் வழங்குதல் தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா ?

(ஆ) (i) தற்போது மேற்படி பயிற்சி மற்றும் நிதி வசதிகள் வழங்கப்படும் பிரதேச செயலகப் பிரிவுகள் யாவையென்பதையும் ,

(ii) அதன் பிரகாரம், மேற்படி தோழில்நுட்பப் பயிற்சி மற்றும் நிதி வ சதி வழங்ப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா ?

(இ) இன்றேல், ஏன் ?

0064 / '09

11.

கௌரவ ரவி கருணாநாயக்க,— கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையின் உள்ள உப்பு உற்பத்தி செய்யும் கம்பனிகளின் எண்ணிக்கை யையும்,

(ii) அவற்றின் அமைவிடங்களையும், உற்பத்தி இயலளவையும்,

(iii) அக் கம்பனிகளின் உரிமையாளர்களின் பெயர்களையும்

அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) கடந்த 20 வருடங்களாக இலங்கையில் உப்புக்கான கேள்வியை வருடாந்த அடிப்படையிலும்,

(ii) கடந்த 10 வருடங்களில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட மொத்த உப்பின் அளவை வருடாந்த அடிப்படையிலும்,

(iii) கடந்த 5 வருடங்களுக்கான அவ் இறக்குமதிகளின் ரூபா பெறுமதியையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0236 / '09

12.

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில், நீரகவளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2008 நவம்பர் 01 ஆம் திகதி முதல் 2009 மார்ச் 16 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சின் ஆலோசனைக் குழு எத்தனை தடவைகள் கூட்டப்பட்டுள்ளதென்பதை அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அவ்வாறு கூட்டப்பட்ட திகதிகள் யாவை என்பதையும்,

(ii) கூட்டப்படாவிடின் அதற்கான காரணம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இந்த அமைச்சின் ஆலோசனைக் குழுக் கூட்டம் சம்பந்தமான எதிர்கால கால அட்டவணையை அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0281 / ' 09

13.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) புகையிரத வீதிகளை புனரமைப்பதற்கான கருத்திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப் பட்ட அம்பேபுஸ்ஸ கல் உடைத்தல் கருத்திட்டத்தின் பொருட்டு கொள்வனவு செய்யப்பட்ட வெடிமருந்துகளின் ஒருபகுதி பயன்படுத்த முடியாமல் அழிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அழிக்கப்பட்டுள்ள வெடிமருந்துகளின் நிதி ரீதியிலான பெறுமதி மற்றும் இப்பொருட்கள் அழிக்கப்பட்ட திகதி என்பவை யாவை என்பதையும்,

(ii) இத்தகைய வெடிமருந்துகளை கொள்வனவு செய்வதற்கும், பின்னர் அவற்றைப் பயன்படுத்தாமல் அழிப்பதற்கும் காரணம் என்னவென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— இப்பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும் போது 2009 ஆகஸ்ட் மாதம் 06 ஆம் திகதி வியாழக்கிழமை மு. ப. 9.30 மணி வரை ஒத்திவைக்கப்படுமாக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

ஊழியர் சகாய நிதிய (விசேட ஏற்பாடுகள்) (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*2.

இந்தியக் குடிவரவு தொழிலாளர் (நீக்கம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*3.

சொத்துக்களால் ஆதாரப்படுத்தப்பட்ட பிணைப் பொறுப்பளித்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*4.

பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

*5.

காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

*6.

தவணை தவறிய வரிகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*7.

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*8.

இலங்கைப் பகிரங்கத் தொழில் முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழு (நீக்கச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*9.

குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூன் 17, 2008) [1].

*10.

ஆளுநர்களின் ஓய்வூதிய சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*11.

மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் சட்டமூலம்— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*12.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*13.

செயலூக்கமற்ற சொத்துக்கள் (மீட்புச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*14.

சூதாட்ட (விசேட ஏற்பாடு) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*15.

முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*16.

குடியியல் வான்செலவு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*17.

இலங்கை பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழு (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*18.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— 06/2006 ஆம் இலக்கமும் 2006.04.25 ஆம் திகதியும் கொண்ட பொது நிர்வாக சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசர், உயர் நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்கான மாதாந்த சம்பளங்கள் பின்வருமாறு அமைய வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இந்தப் பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| மாண்புமிகு பிரதம நீதியரசர் | ரூ.70,000.00 |
| | ரூ. 1,500.00 |
| உயர்நீதிமன்ற நீதிபதிகளும் மேன்முறையீட்டு | |
| நீதிமன்றத்தின் தலைவரும் | ரூ. 65,000.00 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | ரூ. 63,500.00 |

மேலும், உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களாக 2004 செத்தெம்பர் மாதம் 09 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றப்பட்ட சம்பளத்திட்டங்களுக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இந்தப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*19.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— 2008.07.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசர், உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், மேன்முறையீடு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்காக, சம்பளத்தின் 25% இற்குச்சமமான மாதாந்த ஆள்சார் படியொன்றைச் செலுத்துவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இந்தப் பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும், உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய ஆள்சார் படிகளாக பாராளுமன்றத்தினால் 1998 மாச்சு மாதம் 17 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட படிகளுக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் ஆள்சார் படிகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளு மன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*20.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.3),— மேலும், 2007.08.01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசரும் உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவருக்கும் மேன்முறையீடு நீதிமன்ற நீதிபதிகளுக்கும் கீழ்க்காணுமாறு மாதாந்த வீட்டு வாடகைப் படிகள் செலுத்தப்பட வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் இப்பாராளுமன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| மாண்புமிகு பிரதம நீதியரசர் | ரூ. 27,500.00 |
| உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிபதிகளின் தலைவர் | ரூ. 25,000.00 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | ரூ. 22,500.00 |

மேலும், உயர் நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதி களுக்குச் செலுத்தப்பட வேண்டிய வீட்டு வாடகைப் படியாக 2004 செத்தெம்பர் மாதம் 09 ஆந் திகதி பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட படிக்குப் பதிலாக, இப் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட வீட்டு வாடகைப் படி நடைமுறைப்படுத்தப் பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*21.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.4),— 2008.07.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு, பிரதம நீதியரசருக்கு உபசரணைப் படியாக மாதாந்தம் ரூ. 3,500 படியொன்றைச் செலுத்துவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108 (1) ஆம் உறுப்புரையின் கீழ் இப்பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும் இதற்கு முன்னர் பிரதம நீதியரசருக்காக பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட உபசரணைப் படிக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப் படும் உபசரணைப் படி நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றத் தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*22.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் மதுவரி தொடர்பில் ஆக்கப்பட்டு 2008, ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதிய 1544/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*23.

தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சர்,— அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதி,— (190ஆம் அத்தியாயமான) அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் 12, 21, 25, 27, 81, 62, 06, 39, 49, 44, 68, 67, 40, 24, 59, 60, 35, 59, 67 மற்றும் 64ஆம் பிரிவுகளின் கீழ், அஞ்சல், தொலைத்தொடர்புகள் அமைச்சரால் நிதி அமைச்சரின் உடன்பாட்டுடன் ஆக்கப்பட்டு, 2007, ஏப்பிறல் மாதம் 25 ஆம் திகதிய 1494/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2007. 07. 17 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதி அங்கீகரிக்கப்படுமாக.

*24.

சுகாதார நலத்துறை, போசணை அமைச்சர்,— மருத்துவ கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— இலங்கை மருத்துவப் பேரவையுடனான கலந்தாலோசனையுடன் (105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 72 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்டும் 19 ஆம் பிரிவின் கீழ் சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரால் ஆக்கப்பட்டு 2009 பெப்ரவரி மாதம் 25 ஆந் திகதிய 1590 / 13 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2009.04.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

25.

அரசியலமைப்பிற்கான பத்தொன்பதாவது திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

26.

வடக்கு மற்றும் கிழக்கு இரு மாகாணங்களையும் தற்காலிகமாக இணைத்திருப்பதை இரத்துச் செய்வதற்கான (விசேட பிரமாணங்கள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

27.

புண்ணிய ஒழுங்கமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

28.

இலங்கை சிறுகைத்தொழிற்சபை (கூட்டிணைத்தல்) (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

29.

பலாத்காரமாக மதம் மாற்றுவதைத் தடைசெய்தல் சட்டமூலம் — பரிசீலனை.

30.

விலங்குகளுக்குக் கொடுமையிழைத்தலைத் தடுப்பதற்கான இலங்கைச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் - பரிசீலனை.

31.

இலங்கை கடல்கடந்த முஸ்லிம் கல்விசார் நம்பிக்கைப் பொறுப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் - பரிசீலனை.

32.

லஸந்த அலகியவன்ன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

33.

அல்ஹாஜ் அப்துல் ஜவாத் ஆலிம் வலிய்யுல்லாஹ் நம்பிக்கைப் பொறுப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

---

## எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

0022 / ' 09

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சரும் துறைமுகங்கள், விமானச்சேவைகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) துறைமுகங்கள் விமானசேவைகள் அமைச்சிற்காகவும் அவ்வமைச்சுக்குச் சொந்தமான ஏதேனும் கம்பனிக்காகவும் கடந்த 4 வருடங்களாக இற்றை வரையில் வாடகைக்கு அமர்த்தப்பட்ட ஒவ்வொரு வாகனத்தினதும் மொத்தச் செலவினை வருடாந்த அடிப்படையிலும், அலுவலக இடத்திற்காக வாடகைக்கு அமர்த்துவதற்கு செலவிடப்பட்ட மொத்தத் தொகையினையும் அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) (i) இக்காலப்பகுதியில் இவ்வாகனங்களுக்கான எரிபொருளுக்கென செலவிடப் பட்ட மொத்தத் தொகையினை அமைச்சின் மொத்த மீண்டெழும் செலவின் நூற்றுவீதமாகவும்,

(ii) வாடகைக்குப் பெறப்பட்ட அலுவலக இடத்தின் ஒரு சதுர அடிக்கான செலவினையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) குத்தகைக்கு கட்டிடம் பெறப்பட்ட காலத்தினையும் அதற்கு வைப்புப்பணமாகச் செலுத்தப்பட்ட முற்பணத்தையும் அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0026 / '09

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) இற்றைவரையான கடந்த 04 வருட காலத்தில் அமைச்சிற்காகவும் அமைச்சிற்குச் சொந்தமான ஏதாவது கம்பனிக்காகவும் வாடகைக்கு அமர்த்தப்பட்ட ஒவ்வொரு வாகனத்தினதும் மொத்தச் செலவினையும், அலுவலகத்தினை வாடகைக்குப் பெறுவதற்கு செலவிடப்பட்ட மொத்தத் தொகையினையும் வருடாந்த அடிப்படையில் அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிடப்பட்ட பாவனைக்கான எரிபொருள் செலவினை, அமைச்சின் மொத்த மீண்டெழும் செலவின் சதவீதத்திலும்,

(ii) வாடகைக்கு எடுக்கப்பட்ட அலுவலகத் தளத்தின் ஒரு சதுர அடிக்கான செலவினையும்

மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் அவர் குறிப்பிடுவாரா?

(இ) கட்டிடமானது குத்தகைக்கு எடுக்கப்பட்ட காலப்பகுதியினையும் வைப்பாக செலுத்தப்பட்ட முன்கொடுப்பனவையும் அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?